## அறிவித்தல் !

**1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடை கொல்லிகளை கட்டுப்படுத்தற் சட்டத்தின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் (Authorized Officer) மற்றும் வழக்குகளை தாக்கல் செய்தல், மற்றும் வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் யாபேருக்கும்.** (Officers Authorized to Institute Proceedings & Conduct Prosecutions)

***வரையறுக்கப்பட்ட பீ.ஏ.எஸ்.எப்.(லங்கா) தனியார் கம்பனியின் பெயரில் பசமிட் குறுனல் (Basamid Ganular) (டெசோமெட் 98% ஜீ.ஆர்) மற்றும் பின்கம் காபோபியுரான் (காபோபியுரான் 0.3% குறுணல்) உற்பத்தியை பின்பற்றி சட்டவிரோதமாக போலி உற்பத்திகள் வினியோகித்தல் மற்றும் சந்தைப்படுத்தல்***

1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடை கொல்லிகளை கட்டுப்படுத்தற் சட்டத்தின் 14 ஆம் மற்றும் 15 ஆம் பிரிவிற்கு அமைய நாட்டினுள் பயன்படுத்தப்படுகின்ற சகல பீடை கொல்லிகளினதும் உற்பத்தி அனுமதிக்கப்பட்டுள்ள லேபல் மற்றும் தரத்தினைக் கொண்டதுமாக கட்டாயமாக பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஆயினும் வரையறுக்கப்பட்ட பீ.ஏ.எஸ்.எப்.(லங்கா) தனியார் கம்பனியின் பெயரில் **பசமிட் குறுனல் (Basamid Ganular) (டெசோமெட் 98% ஜீ.ஆர்) மற்றும் பின்கம் காபோபியுரான் (காபோபியுரான் 0.3% குறுணல்)** உற்பத்தியை பின்பற்றி அந்தப் பெயரி லேயே போலி உற்பத்திகள் மோசடியான முறையில் வினியோகித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாக பீடைக் கொல்லி பதிவாளருக்கு ஆரம்பத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடை கொல்லிகளை கட்டுப்படுத்தற் சட்டத்தின் கீழ் **பசமிட் குறுனல் (Basamid Ganular) (டெசோமெட் 98% ஜீ.ஆர்) மற்றும் பின்கம் காபோபியுரான் (காபோபியுரான் 0.3% குறுணல்)** எனும் பெயரினால் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பதிவும் சட்டபூர்வமான உற்பத்தியாக இல்லாததுடன், மேற்போந்த உற்பத்தி லேபல் மற்றும் நிறம் மற்றும் வர்த்தகப் பெயர் உட்பட போலியானது. இந்த உற்பத்தி சிறிது காலமாக பயன்பாட்டில் இருந்த சட்டபூர்வமான உற்பத்தியை பின்பற்றி மோசடியாக பொதி செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது **(இணைப்பு 1-2)**

பிரதானமாக தேயிலைச் செய்கை விஸ்தரிக்கப்பட்டுள்ள நுவரெலியா, கம்பளை, ருவன்வெல்ல, ஹற்றன் மற்றும் மறக்கறிச் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற கல்பிடி போன்ற பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்துடன் காட்டப்பட்டுள்ள **பசமிட் குறுனல் (Basamid Ganular) (டெசோமெட் 98% ஜீ.ஆர்) மற்றும் பின்கம் காபோபியுரான் (காபோபியுரான் 0.3% குறுணல்)** உற்பத்தி தொடர்பில் சகல பீடைக் கொல்லிகள் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் வழக்குகளை தாக்கல் செய்தல், மற்றும் வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் யாபேரும் அவதானமாக இருக்குமாறு இத்தால் அறியத் தருகின்றேன். சகல விதமான சட்ட விரோதமான செயற்பாடுகள் தொடர்பிலும் 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடை கொல்லிகள் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் சாட்டப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைய முறையான விசாரனைகளை நடாத்தி சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறியத் தருகின்றேன்.

கலாநிதி ஜே.ஏ. சுமித்,
பீடை கொல்லிகள் பதிவாளர்
2020, ஆகஸ்ட் 06 ஆம் திகதி,
பேராதனை.

Tel./Fax - 0812388135 அல்லது(Tel) - 0812388076 கையடக்க0772363824




**இணைப்பு** 1. – வரையறுக்கப்பட்ட பீ.ஏ.எஸ்.எப்.லங்கா தனியார் கம்பனியின் பெயரில் **பசமிட் குறுணல் (டெசோமெட் 98% ஜீ.ஆர்)** போலியான உற்பத்தி




**இணைப்பு - 2.** – வரையறுக்கப்பட்டபீ.ஏ.எஸ்.எப்.லங்காதனியார் கம்பனியின் பெயரில் **பின்கம் காபோபியுரான் (காபோபியுரான் 0.3%குறுணல்)** போலியானஉற்பத்தி